OS 38/2021

வா.சா.2 முரளி த/பெ சண்முகம்

நாள் 12.08.2025

**குறுக்கு விசாரணை**

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் வந்தவாசி ரோடு ஆரணி புதிய காலனியில் குடியிருக்கிறேன். நான் எந்த வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் ரூபாய் வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். யார் சொல்லி நான் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் தரணி டீச்சர் அழைத்ததன் பேரில் வந்திருக்கிறேன். வாதி எனக்கு சொந்தக்காரரா என்றால் என் அம்மாவும் வாதியின் அம்மாவும் நண்பர்கள். வாதி என்ன வேலை செய்கிறார் என்றால் டீச்சர் வேலை செய்கிறார். எந்த ஊரில் வேலை செய்கிறார் என்றால் திருவண்ணாமலையில் வேலை செய்கிறார். வாதியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் அரை கிமீ இருக்கும். வாதி திருவண்ணாமலையில் தங்கி வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். எதற்காக பணம் கொடுக்கப்பட்டது என்றால் வீடு புதுப்பிப்பதற்காக பணம் கொடுக்கப்பட்டது. பணம் கொடுத்ததற்கு ஆவணம் எழுதி வாங்கினார்களா என்றால் பாண்டு எழுதி வாங்கினார்.

2. பாண்டு பேப்பர் வெள்ளை கலரா பச்சை கலரா என்றால் பச்சை கலர் ஆகும். பாண்டு எழுதும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் ரூ.3லட்சம் கொடுத்தார்கள். பாண்டில் எவ்வளவு ரூபாய்க்கான ஸ்டேம்ப் ஒட்டப்பட்டிருந்தது என்றால் 1 ரூபாயா 2 ரூபாயா எனக்கு நியாபகம் இல்லை. எத்தனை ஸ்டேம்ப் ஒட்டப்பட்டது என்றால் 1 ஸ்டேம்ப் ஒட்டப்பட்டது. பாண்டில் எந்த பக்கம் கையெழுத்து போட்டார் என்றால் வலது பக்கம் கையெழுத்து போட்டார். எத்தனை கையொப்பம் போட்டார் என்றால் 2 கையொப்பம் போட்டார் நான் அதை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பாண்டை யார் எழுதியது என்றால் ஜெயபாலன் என்பவர் எழுதினார். வாதி குமரேசன் என்பவர் பாண்டு எழுதியதாக சொல்லிருக்கிறார் என்றால் அவர் எழுதவில்லை. பாண்டில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் யார் யார் என்றால் நானும் பரசுராமனும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

3. நான் 2வது ஆக சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1ல் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் வாதி தயார் செய்துள்ள பாண்டுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி சீட்டு நடத்தியதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்றால் சீட்டு நடத்தவில்லை. பாண்டு எங்கு எழுதப்பட்டது என்றால் அருணகிரிசத்திரத்தில் எழுதப்பட்டது. வாதி தற்போது தான் திருவண்ணாமலையில் இருக்கிறார். வாதிக்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.